(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 27—3—1974, புதன்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 28—3—1974, வியாழக்கிழமை, முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 30—3—1974, சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 2—4—1974 செவ்வாய்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர் முன்னாள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

அடுத்து 1974-75-ம் ஆண்டுக்கான மானிய கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

6. நடைமுறைக் கேள்வி

ஓர் உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டால் அதற்கான காரணங்களைத் தெரிவிப்பது குறித்து

திரு. எம். ஏ. லத்தீப் : சார், அன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், தலைவரவர்களே, இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் மாநிலத்திலே இருக்கின்ற மக்கள் பிரச்னைகளைச் செய்தித்தாள்கள் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது சில முக்கியமான பிரச்னைகள் அவர்களுக்குத் தோன்றுகின்றன. அதை இந்த மன்றத்தின் கவனத்திற்கு